**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. யாத்தல் என்ற சொல்லின் பொருள் யாது?
2. வைத்தியநாத தேசிகரின் இலக்கண நூல் எது?
3. ஆய்த எழுத்திற்கு வழங்கப்படும் வேறுபெயர் யாது?
4. தொடை என்பதன் பொருள் யாது?
5. எதுகைத் தொடை என்றால் என்ன?
6. வெண்பாவிற்குரிய ஓசையின் பெயர் யாது?
7. தண்டியலங்காரத்தில் சொல்லப்பட்ட அணிகள் எத்தனை?
8. செய்யுளில் அமையும் சொல்லமைப்பு வகைகளை எடுத்துரைப்பது எது?
9. வைதருப்ப நெறியின் மறுப்பு நெறி எது?
10. செறிவெனப்படுவது யாது?
11. தன்மை நவிற்சி அணியின் வேறு பெயர் யாது?
12. பிறிது மொழிதலணி என்று சுட்டப்படும் அணி யாது?
13. புணர் நிலையணி எத்தனை வகைப்படும்?
14. காட்சிப் பொருள் வைப்பணி என்று எதனைக் குறிப்பிடுவர்?
15. நிரல் நிரையணி என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. யாப்பிலக்கண நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
2. செய்யுளின் உறுப்புகள் எவை?
3. தளை என்றால் என்ன?
4. தொடை விகற்பம் என்பன எவை?
5. கலிப்பாவின் உறுப்புகள் யாவை?
6. வைதருப்ப நெறியின் பத்துக் குணங்கள் யாவை?
7. கௌட நெறி – குறிப்பு வரைக.
8. தீவக அணி என்றால் என்ன? சான்று தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தளைகள் குறித்துக் கட்டுரை வரைக.

   (அல்லது)

   (ஆ) தொடை விகற்பங்கள் விவரி.

2. (அ) ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறி வகைகளைச் சான்று தந்து விளக்குக.

   (அல்லது)

   (ஆ) உவமையணியை விளக்குக.

3. (அ) தற்குறிப்பேற்றணியை விளக்கி வரைக.

   (அல்லது)

   (ஆ) சுவையணி குறித்துக் கட்டுரை வரைக.

***